1987 மார்ச் 6]

[முற்பகல் 11.10]

3. அவை உரிமை மீறல் பிரச்சினை 'அசைடு' பத்திரிகை மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. சட்டமன்றப் பேரவை விதி 219-ன் கீழ், மாதம் இருமுறை வெளிவரும், 1/15-3 87 ஆம் நாளிட்ட ''ASIDE'' என்னும் பத்திரிகையில், சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் முறை பற்றியும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விடுதியில் உறுப்பினர்கள் நடத்தை குறித்தும் எழுதப்பட்டுள்ள சில வாசகங்கள் பேரவையின் கண்ணியத்தையும், உறுப்பினர்களின் உரிமைகளையும் பெருமளவு பாதிப்பதாக அமைந்துள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். வேணுகோபால், திரு. எஸ். சிவராஜ், திரு. ஆர். தியாகராஜன், திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன், திரு. எஸ். இராசாராமன், திரு. எஸ். பி. மணவாளன், டாக்டர் க. நல்லமுத்து, திரு. எ. தெய்வநாயகம், திரு. என். சிவஞானம், திரு. டி. வெங்கட ரெட்டி, திரு. கே. வெங்கடாசலம் மற்றும் திருமதி பா. வளர்மதி ஆகியோர் பேரவையில் இப்பிரச்சினையை எழுப்புவதற்கு அனுமதி கேட்டு அறிவிப்புக்களைக் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவை உரிமை மீறிய பிரச்சினையாகும் என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால்.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ?

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் சொன்னதிலே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒருவர் பெயரைச் சொல்லிவிட்டேன். அவர் பேசட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : புரொசீஜரிலே சொல்கிறேன். நீங்களே அது என்ன சப்ஜெக்ட் மேட்டர் என்று வாசித்து விடுங்களேன். ரூல்ஸை ஃபாலோ செய்ய வேண்டும். வேறொன்றும் தப்பாக நான் சொல்லவில்லை.

MR. SPEAKER : I shall waive it under rule 312.

திரு. எஸ். வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து வெளிவரும் ''அசைட்'' என்ற ஆங்கிலப் பத்திரிகை, மாதம் இரு முறையாக வருகின்ற அந்தப் பத்திரிகையில் தமிழக சட்டமன்றத்தைக் குறித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடைப்பதாகச் சொல்லப்படும் சம்ப

[திரு. எஸ். வேணுகோபால்] [.987 மார்ச் 6

வங்கள் குறித்து 1-லிருந்து 15 ஆம் தேதி, மார்ச் மாதம், 1987லே வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் அநேகமாக எழுதப்படிக்கத் தெரியாத, அரசியல் தெரியாதவர்கள் என்றும், சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் என்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி ஏதோ கேளிக்கை கூடாரம் என்பது போலவும், அங்கே மதுவும் மங்கையும், ஆபாசப் படங்களும், குடியும் கூத்துமாக தங்குதடையின்றி நடைபெறுவதாகவும் தரக்குறைவான முறையில், தவறான முறையிலே எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு எழுதப்பட்டதன் மூலம் பொது மக்கள் மத்தியிலே, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றிய அந்தஸ்தும், மரியாதையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் விடுதியில் தங்குகின்ற எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் இப்படித்தான் நடந்து கொள்கிறார்களோ என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியிலே எழுவதற்குக் காரணமாக அமைந்து உள்ளது. இதன் காரணமாக எங்களைப் பொதுமக்கள் கேலியாகவும், கிண்டலாகவும், கண்ணியத்திற்குக் குறைவாகவும், சந்தேகக் கண்களுடனும் பார்க்கக் கூடிய ஒரு நிலை உருவாகி இருப்பது எங்களுக்கெல்லாம் மிக்க வேதனையை அளிக்கிறது. இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி எழுத்து மூலமாக இந்தப் பத்திரிகை ஆசிரியர் அவை உரிமை மீறல் குற்றத்திற்கு ஆளாகிறார் என்று சொல்வதுடன், எங்களது உரிமையைப் பாதிக்கின்ற இந்தச் செயலைச் செய்வதால் இதை அவை உரிமைக் குழுவிற்கு விட்டு விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இப்பொழுது மட்டுமல்லாமல், எல்லா வீடுகளிலும் கூட, எங்கள் வீட்டில் இருக்கின்றவர்களெல்லாம் கூட இதைப் பார்த்துவிட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கே போக வேண்டாம் என்று நினைக்கின்ற நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலை இருக்குமேயானால்—அரசியல் வாதிகள் நீண்ட நெடுங்காலமாக, கடந்த காலங்களிலே அதுவும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் மிகவும் இழிவான விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பது தான் என்னுடைய கருத்தாக இருக்கும். ஆக, தனிப்பட்ட முறையில் இந்தப் பத்திரிகை ஆசிரியர் எழுதியிருக்கலாம். நான் அந்த விவாதத்திற்குப் போகத் தயாராக இல்லை. தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் இந்தச் சம்பவத்தைப் பற்றி நீங்கள் ஆய்வு செய்து இதைப் பேரவையின் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அசைட்'' என்ற ஆங்கில வார இதழில் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி ஒட்டுமொத்தமாகவும், சில கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களை மட்டும் பாராட்டியும்,

1987 மார்ச் 6] [திருமதி பா. வளர்மதி]

மிகவும் தரக்குறைவான முறையில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செய்வது இல்லை என்றும், பணம் சம்பாதிப்பதே குறிக்கோளாக உள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, பெண் சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி மிகவும் கேவலமான முறையில், அவர்களின் வாழ்க்கையைக் களங்கப்படுத்தும் முறையில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கருத்துக்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் பணிகளைச் செய்வதற்குத் தடங்கலாகவும், இடையூறாகவும் இருக்கும் என்கின்ற காரணத்தால், இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற ''அசைட்'' பத்திரிகை ஆசிரியரை உரிமைக் குழுவின் முன் ஆஜராக்கி அவரை விசாரிக்க வேண்டுமென்று வேண்டி இந்த உரிமைப் பிரச்சினையைத் தங்கள் முன் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் இருப்பதாக நான் கருதுவதால், இப்பிரச்சினையை ஆய்ந்து பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக, பேரவை விதி 226-ன் கீழ் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகின்றேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) விளவங்கோடு வட்டத்தின் சில கிராமப்பகுதிகளில் சிதபேதி நோயினால் பாதிப்பு.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' விளவங்கோடு வட்டத்தில் கடையல், அருமனை பேரூராட்சிகளிலும்,, மாங்கோடு ஊராட்சியிலும் 1986 டிசம்பர் மாதம் முதல் இரத்தபேதி நோய் பாதித்து இதுவரை 14 பேர் இறந்துள்ளது குறித்தும் நூற்றுக்கணக்கானோர் அபாய எல்லை தாண்டாமல் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது குறித்தும் நோய் தொடர்ந்து பரவி வருவதால் மக்கள் மத்தியில் நிலவுகின்ற கவலை குறித்தும் '' உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.